(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
10 சைவசமய பாடப்பரீட்சை : 2025
தரம் பத்து



www.nselva.com

காலம் அளவு } 2.00 மணி

புள்ளிகள் : 100

இல.

மாணவர் சுட்டெண்: }

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ''சித்தமும் செல்லாச் சேட்சியன்'' என்று பாடியவர்.
   1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
2. வாழ்க்கைப்படி நிலைகளில் மாணவப்பருவம் என்பது.
   1) பிரமச்சரியம் 2) இல்லறம் 3) வானப்பிரஸ்தம் 4) துறவறம்
3. நவீனயுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்படுபவர்.
   1) நாவலர் 2) இராமநாதன் 3) மகாத்மாகாந்தி 4) விபுலானந்தர்
4. கிரகங்களின் நடுநாயகமாக நிற்பது.
   1) சனி 2) சூரியன் 3) வியாழன் 4) ராகு
5. சனீஸ்வரனின் வாகனம்.
   1) காகம் 2) நாய் 3) மயில் 4) இடபம்
6. விநாயகசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் நாட்கள்.
   1) ஆறு 2) இருபத்தொன்று 3) இருபத்தேழு 4) முப்பது
7. வசிட்டமா முனிவரின் மனைவி.
   1) ஊர்வசி 2) திலகவதியார் 3) அருந்ததி 4) அகலிகை
8. சூரியனை முழுமுதலாகப் போற்றும் சமயம்.
   1) சைவம் 2) சாக்தம் 3) கௌமாரம் 4) சௌரம்
9. ''குனித்த புருவமும்.....'' எனும் திருப்பதிகத்தில் இடம்பெறும் சிவனின் அருட்கோலம்.
   1) பிட்சாடனர் 2) சந்திரசேகரர் 3) தட்சிணாமூர்த்தி 4) நடராசர்
10. ''திருக்கோயில் இல்லாத திருவிலூரும்.....'' என்று பாடியவர்.
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
11. தேவாசிரியன் மண்டபம் அமைந்த ஊர்.
    1) திருவாரூர் 2) திருச்செந்தூர் 3) திருஆலவாய் 4) பழனி
12. தந்தையின் யாகத்துக்கு பொன் வேண்டித் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்.
    1) ''துணிவளர்திங்கள்'' 2) ''மந்திரமாவது நீறு''
    3) ''இடரினும் தளரினும்'' 4) ''சதுரம்மறை''
13. மெய்கண்டதேவரின் மாணவர்களில் தலை சிறந்தவர்.
    1) மனவாசகம் கடந்தார் 2) அருணந்தி சிவாசாரியார்
    3) மறைஞானசம்பந்தர் 4) உமாபதி சிவாசாரியார்
14. சுவாமி விபுலானந்தர் பாடசாலைகளை நிறுவ உதவிய நிறுவனம்.
    1) சைவபரிபாலனசபை 2) சைவ வித்தியா விருத்தி சங்கம்
    3) விவேகானந்த சபை 4) இராமகிருஷ்ண சங்கம்

15. அறிவிக்காமலே அறியும் பொருள்
1) பதி 2) பசு 3) பாசம் 4) ஆணவம்
16. ஆணவமலத்தால் மட்டும் பீடிக்கப்பட்ட ஆன்மா.
1) விஞ்ஞானகலர் 2) பிரளயாகலர் 3) சகலர் 4) திரிமலத்தார்
17. குருவழிபாட்டால் வீடுபேறு அடைந்தவர்.
1) பூசலார் 2) குலச்சிறையார் 3) திருநீலகண்டர் 4) கலிக்காமர்
18. ''அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்'' என்று வேண்டியவர்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
19. திரௌபதை நாயகியாக விளங்கும் இதிகாசம்.
1) இராமாயணம் 2) சிவரகசியம் 3) மகாபாரதம் 4) திருமுருகாற்றுப்படை
20. திருகோணமலை மாவட்டத்தில் பிரசித்தமான திருத்தலம்.
1) திருக்கேதீச்சரம் 2) முன்னேச்சரம் 3) திருக்கரசை 4) நகுலேச்சரம்
21. இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் காணப்படும் ஆலயம்.
1) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 2) நயினை நாகபூசணி அம்மன்
3) நல்லூர்க் கந்தசுவாமி கோயில் 4) புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன்
22. விநாயகரால் வதஞ்செய்யப்பட்ட அசுரன்.
1) சூரபன்மன் 2) கஜமுகாசுரன் 3) நரகாசுரன் 4) சிங்கமுகாசுரன்
23. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்று கூறியவர்.
1) திலகவதியார் 2) ஆண்டாள் 3) ஔவையார் 4) கபிலர்
24. கலைகளின் அதிதேவதை.
1) இலக்குமி 2) துர்க்கை 3) கொற்றவை 4) சரஸ்வதி
25. 'சத்தியம் வத' மகாவாக்கியம் காணப்படுவது எவற்றில்?
1) பிராமணம் 2) சங்கிதை 3) ஆரணியகம் 4) உபநிடதம்
26. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளிஅம்மன் ஆலயப் பிரதான சடங்கு.
1) திருக்கதவுதிறத்தல் 2) கன்னிமார்பிடித்தல் 3) தீமிதிப்பு 4) பொங்கல்
27. நடைமுறையில் உள்ள கால அலகுகளுள் பெரியது
1) மாதம் 2) ஆண்டு 3) வாரம் 4) நாள்
28. இளவேனில் கால ஆரம்பம் எனப்படுவது.
1) தைப்பொங்கல் 2) சித்திரை வருடப்பிறப்பு 3) ஆடிப்பிறப்பு 4) தீபாவளி
29, பூர்வக்கிரியைகளுள் முக்கியமானது.
1) திருமணம் 2) நாமகரணம் 3) புதுமனைபுகுதல் 4) உபநயனம்
30. சுகத்தைச் செய்பவன் என்ற பொருளைத் தருபவர்.
1) சங்கரன் 2) சலமியன் 3) நிர்விகாரி 4) நிர்மலன்
31. இசையுடன் தொடர்புடைய வேதம்.
1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம்
32. திருமுறைகளை அருளிய அருளாளர்களின் எண்ணிக்கை.
1) நான்கு 2) பன்னிரண்டு 3) இருபது 4) இருபத்தேழு
33. தண்ணளிவெண்குடை வேந்தன் எனப் போற்றப்படுபவன்.
1) மனுநீதிகண்டசோழன் 2) இராஜராஜசோழன்
3) நரசிம்மபல்லவன் 4) இராஜேந்திரசோழன்
34. நயினை நாகபூஷணி அம்மன் ஆலய விருட்சம்.
1) அரசமரம் 2) வன்னிமரம் 3) கல்லாலமரம் 4) வில்வமரம்
35. சேத்திரபாலகர் எனப் போற்றப்படுபவர்.
1) வீரபத்திரர் 2) ஐயனார் 3) வைரவர் 4) திரௌபதி
36. சிவதரிசன பலனைத் தரும் கடவுள்.
1) வீரபத்திரர் 2) காளி 3) ஐயனார் 4) சண்டேசுரர்
37. சிவலிங்கம் சிவபெருமானின்
1) அருவத்திருமேனி 2) உருவத்திருமேனி
3) அருவுருவத் திருமேனி 4) அறிவுருவத்திருமேனி

மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்க.

நூல்	நூல் அடங்கும் திருமுறை	நூல் ஆசிரியர்
A - திருத்தொண்டத்தொகை	D - 11	G - சேந்தனார்
B - திருப்பல்லாண்டு	E - 07	H - காரைக்கால் அம்மையார்
C - திருவாலங்காட்டு திருப்பதிகம்	F - 09	I - சுந்தரர்

38. மார்கழித் திருவாதிரை அன்று பாடப்பட்ட நூல்.
1) AEI 2) BFG 3) CDH 4) ADG

39. புனிதவதியாரால் இயற்றப்பெற்ற நூல்.
1) CDH 2) AFG 3) BEI 4) CEI

40. சிவனடியார்களின் பெருமையைக் கூறும் நூல்
1) ADH 2) BFG 3) CDH 4) AEI

(40 x 1 = 40 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பிள்ளையார் கதை என்ற நூலின் ஆசிரியர் யார்?
2. இந்துசமயத்தின் மறுபெயர் யாது?
3. திருவருட்பயன் என்ற நூலின் முதலாவது அதிகாரம் யாது?
4. மதங்கசூளாமணி என்ற நாடக நூலை இயற்றியவர் யார்?
5. உழவாரப்படையாளி எனப் போற்றப்படுபவர் யார்?
6. சந்திரமானம் என்றால் என்ன?
7. நாடோறும் நியமமாக எந்த நேரத்தில் நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
8. யோசன பந்திக்கு யோக்கியர் ஆவார் யாவர்?
9. போசனத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது?
10. சிவபெருமானை வழிபடுவதற்குரிய முக்கியஸ்தானம் யாது?

(10 x 1 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருமுறைப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. “உற்றுமை சேர்வது .....” 2. “நாம் ஆர்க்கும் .....”
3. “மீளா அடிமை .....” 4. “பாலுக்குப் பாலகன் .....”
5. “விநாயகனே வெல் .....”

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களை எழுதுக.

1. “அகழ்வாரைத் தாங்கும் .....” 2. “விழுப்பேற்றின் அ.ஃ. தொப்ப .....”
3. “இறல் ஈனும் .....” 4. “அறம் கூறான் .....”
5. “நிறை உடைமை .....” **(5x2 = 10** புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. **"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்....."** - திருமந்திரம்

   I. வேதங்கள் அபௌர்ஷேயம் என அழைக்கப்படக் காரணம் யாது?
   II. இருக்கு வேதத்தில் போற்றப்படும் தெய்வங்கள் யாவை?
   III. யசுர்வேதத்தில் கூறப்படுபவை யாவை?
   IV. அதர்வண வேதத்தில் கூறப்படுபவை யாவை?
   V. ஞானகாண்டம் எவற்றை விளக்குகின்றது?

   (5 x 2 = 10 புள்ளிகள்**)**

2. **"சொற்றுணை வேதியன் ....."** - திருநாவுக்கரசர் தேவாரம்

   I. திருநாவுக்கரசருக்குச் சமணர் இழைத்த கொடுமைகள் யாவை?
   II. திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்த சமயகுரவர் யார்? அவர்கள் இருவரும் இணைந்து புரிந்த அற்புதங்கள் யாவை?
   III. மருணீக்கியாரின் சூலைநோய் எவ்வாறு நீங்கியது?
   IV. திருநாவுக்கரசர் தனது உடலில் சூல, இடப இலச்சினைகளை ஏன் பொறித்தார்?
   V. அப்பூதியடிகள் நாவுக்கரசர் மீதுள்ள பக்தியை எவ்வாறு வெளிப்படுத்தினார்?

   (5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. **"அகரவுயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கு நிறைந்து"** - திருவருட்பயன்

   I. பதியின் இருவகை இலக்கணங்கள் யாவை? விளக்குக.
   II. ஆன்மா சதசத்து எனவழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
   III. ஆன்மாக்கள் எப்பொழுது இருவினை ஒப்பு நிலையை அடைகின்றன?
   IV. ஆணவம் மூலமலம் என ஏன் அழைக்கப்படுகின்றது?
   V. அகச்சந்தானகுரவர்கள் எனப்படுபவர்கள் யாவர்?

   (5 x 2 = 10 புள்ளிகள்**)**

4. **"திருக்கோயில் இல்லாத திருவிலூரும்"** - தேவாரம்

   I. ஐந்தொழில்கள் உணர்த்தும் திருவிழாக்கள் யாவை?
   II. கிராம சாந்தி என்றால் என்ன?
   III. திருவிழாக்களால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   IV. வாஸ்து சாந்தி என்றால் என்ன?
   V. ஆறுகாலப் பூசைகள் யாவை?

   (5 x 2 = 10 புள்ளிகள்**)**

5. **எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

   I. தீபாவளி
   II. திருமூலர்
   III. சைவ வித்தியா விருத்திச் சங்கம்
   IV. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

   (2 x 5 = 10 புள்ளிகள்**)**